Registered as a News Paper    பக்கங்கள் : 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆவணி 13    (29 - 08 - 1992)    சனிக்கிழமை    ஓசை 193

## பரீட்சைப் பெறுபேறுகள் பெருமளவில் வீழ்ச்சி

கல்விப் பொதுத் தராதர உயர்தர விசேட பரீட்சைப் பெறுபேறுகளில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர விசேட பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டன. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் நேற்று மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் எடுத்து வரப்பட்டன. இப்பெறுபேறுகள் தரம் பிரிக்கப்பட்டு சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இவ் விசேட பரீட்சையில் விரல் விட்டு எண்ணக் கூடிய மாணவர்களே அதிவிசேட சித்தியை நான்கு பாடங்களில் பெற்றுள்ளனர். அண்மைக் காலத்தில் நில (4ஆம் பக்கம் பார்க்க)

## "பலோமி" பரீட்சை


(யாழ்ப்பாணம்)

''பலோமி'' தரம் 1, தரம்2 ஆகிய பரீட்சை இன்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையத்தில் பெற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டப்படு (4ஆம் பக்கம் பார்க்க)

# எதிரியின் சவாலை முறியடிப்பதற்கு தேசிய எதிர்ப்பியக்கத்தை கட்டுவோம்

## தலைவர் பிரபாகரன் அறைகூவல்



(யாழ்ப்பாணம்)

''தமிழரின் வரலாற்றுப் பூமியை ஆக்கிரமிப்பால் அபகரித்துக்கொள்ளச் சிங்களப் பேரினவாதம் பகீரத முயற்சிகளைச் செய்கிறது. இதனால் எமது தேசிய விடுதலைப்போராட்டம் என்றுமில்லாத ஒரு பெரிய சவாலைச் சந்தித்து நிற்கிறது.

இந்தச் சவாலை நாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு முறியடிப்பதாயின் ஒரு திடமான, வலுவான தேசிய எதிர்ப்பியக்கத்தை நாம் கட்டி எழுப்பவேண்டும். போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்கம் செய்யவேண்டும்''

இவ்வாறு தலைவர் பிரபாகரன் அறைகூவல் விடுத்துள்ளார். விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ள முத்தமிழ் விழா மலருக்கு தலைவர் வழங்கியுள்ள ஆசிச்செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தலைவர் பிரபாகரனால் வழங்கப்பட்டுள்ள ஆசிச் செய்தி வருமாறு:

எமது மொழியும் கலையும், பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக, எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை. எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக நிற்பவை எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர். எமது இனத்தின் ஆன்மா. எமது உடல்கள் அழிந்தாலும், உடமைகள் அழிந்தாலும், எமது இனத்தின் இதயமாக இயங்கும் பண்பாட்டு வாழ்வை எவராலும் அழித்துவிட முடியாது.

எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில் எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும் நேசமும் தேசிய பற்றுணர்வாக பரிணாமம் பெறுகிறது. இந்தத்தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக் கொள்ளும் பொழுதுதான் ஒருதேசம் தனக்கே உரித்தான தனித்துவமான ஆளுமையைப் பெறுகிறது. இந்தத் தேசிய ஆளுமையை கொண்ட மக்கள் இனம்தான் ஒரு அரசை அமைத்துக்கொள்ளும் தகுதியைப் பெறுகிறது.

ஒரு திடமான, தனித்துவமான தேசிய ஆளுமையை கொண்ட மக்களாக தமிழீழ மக்கள் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறார்கள். இரத்தப்புரட்சியாக கட்டவிழ்ந்த, நீண்ட கடினமான போராட்ட வரலாறும், அதனால் உருவான நிலைதளரா இலட்சிய உறுதியும், நாட்டுப்பற்றும் எமது மக்களை தேசிய ஆளுமை கொண்ட மக்கள் இனமாக மாற்றியமைத்திருக்கிறது. இதனால் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்களாக, தனியரசு அமைக்கும் தகுதி பெற்றவர்களாக விளங்குகிறார்கள்.

உலகெங்கும் தமிழினம் பரந்து வாழ்ந்தாலும் தமிழீழத்தில்தான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கிறது. தமிழீழத்தில்தான் தேசிய ஆளுமை பிறந்திருக்கிறது. தமிழீழத்தில் தான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கிறது. தமிழீழத்தில் பிறந்து, வளர்ந்து, நிமிர்ந்து நிற்கும் தமிழனின் தேசிய ஆளுமையைக் கொன்றுவிட எமது பகைவர்கள் திடசங்கற்பம் பூண்டு நிற்கிறார்கள். எமது வரலாற்று

## சின்ன மண்டலாயில் புலிகள் அதிரடி

# 9 காவலரண்கள் நிர்மூலம்

# 10 ராணுவம் பலி: பலர் காயம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றின் மூலம் சின்னமண்டலாய் பகுதியிலிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் ஒன்பது தொடர் காவலரண்கள் அழிக்கப்பட்டன நேற்று அதிகாலை இடம்பெற்ற இத் துணிகரத்தாக்குதலில் பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

ஆனையிறவு - வெற்றிலைக்கேணி இராணுவ முகாம்களை இணைக்கும் இராணுவ வேலியாக, வெற்றிலைக்கேணி தரவையில் அமைந்துள்ள சின்ன மண்டலாய் பகுதியில் இருந்த காவலரண்களே புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்காகின.

இன்று அதிகாலை 1.20 மணிக்கு புலிகளால் நடத்தப்பட்ட இத்திடீர் தாக்குதல் சுமார் பத்து நிமிடங்கள் மட்டுமே நீடித்தது இதைத்தொடர்ந்து காவலரண்கள் யாவும் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. இக் காவலரண்களில் அதிகாலை 3.00 மணிவரை புலிகள் நிலை கொண்டிருந்ததாகவும் பின்னர் அழித்துவிட்டு வெளியேறியதாகவும் தெரியவருகின்றது.

இம் மோதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினர் தவிர பலர் காயமடைந்ததாகவும், பலர் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி முகாம் நோக்கி ஓடிவிட்டதாகவும் தெரியவருகின்றது.

## அதிகாலை ஹெலி தாக்கு

யாழ் நகர கரையோரப் பகுதிகளை நோக்கி இன்று அதிகாலை உலங்கு வானூர்தி ஒன்று தொடர்ச்சியான கலிபர்த் தாக்குதலை நடாத்தியது.

அதிகாலை 2 00மணி முதல் சுமார் 15 நிமிடங்கள் தொடர்ச்சியாக இத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)

இன்று அதிகாலை வெற்றிலைக்கேணி தரவையில் அமைந்துள்ள சின்னமண்டலாய் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தின் காவலரண்கள் விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்ட போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள் பின்வருமாறு.

★ ஆர் பி ஜி — 01
★ ஆர். பி. ஜி ஷெல் — 05
★ ஆர் பி ஜி புரொப்ளர் — 05
★ 203 பிஸ்டல் — 01
★ 203 ஷெல் — 06
★ ஏ. கே. எல். எம். ஜி. — 02
★ ஏ. கே. எல். எம்.ஜி ரம் மகசீன் — 02
★ ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர் — 06
★ ரி 56 - 2 — 03
★ ரி 56 மகசீன் — 23
★ ரி 56 கோல்சர் — 08
★ ரி 56 — 02
★ ரி 81 - 1 — 02
★ ரி 81 - 1 மகசீன் — 07
★ பிறவுணிங் பிஸ்டல் — 01
★ பிறவுணிங் மகசீன் — 02
★ நடுத்தர ரவைகள் — 6650
★ நடுத்தர ரவை லிங்குடன் — 770
★ நேற்றோ ரவை — 1760
★ 9 எம். எம். ரவை — 16
★ 5.56 ரவை லிங்குடன் — 22
★ கிறனைட் — 25
★ சிக்னல் குண்டு — 01
★ பரா லைட் — 02
★ பைனோ குளோர் — 01
★ ஹெல்மட் — 8
★ மில்ரி பெல்ட் — 19
★ மில்ரி சப்பாத்து — 25
★ மில்ரி பாக் — 16
★ கொம்பாஸ் — 1
★ தண்ணீர்க்கான் — 25
★ தண்ணீர்க்கான் கோல்சர் — 14

## வலி - வடக்கில் ஷெல்வீச்சு; 3 பொதுமக்கள் காயம்

வலி வடக்கினை ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவம் மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொண்ட எறிகணை வீச்சுக்களினால் மூவர்படுகாயமடைந்ததுடன் சில வீடுகளும் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 10 மணியளவில் பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட பத்திற்கும் மேற்பட்ட எறிகணைகள் தெல்லிப்பளை மாத்தனை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனால் இப் பகுதியில் வசித்த உமாகரன் (வயது 24), சுந்தரலிங்கம் (வயது 50) உட்பட மேலும் ஒருவர் படுகாயமடைந்தார். இவர்களில் இருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாத்தனை பகுதியில் சில வீடுகளும் சேதமாகின. (ச), (9), (11)

## அலங்கார ஊர்தியில் 9மாவீரர் உருவப்படங்கள்

27-08-92 அன்று காலை மாதகலில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஒன்பது வீர வேங்கைகளின் உருவப் படங்களைத் தாங்கிய அஞ்சலி ஊர்தி இன்று யாழ் குடாநாடெங்கும் மக்களின் அஞ்சலிக்காகப் பவனிவர இருக்கிறது.

விசேடமாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வரும் இம் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மக்கள், தத்தமது இல்லங்களின் வாசல்களில் ஈகச் சுடர்களை ஏற்றியும், மலர்களைத் தூவியும் தமது அஞ்சலியைச் செலுத்துவார்கள்.

[4ஆம் பக்கம் பார்க்க]

## காவல் துறையினர் நன்றி தெரிவிப்பு

(நமது நிருபர்)

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவகால ஒழுங்குகளில் தம்முடன் இணைந்து பணியாற்றிய அமைப்புக்களுக்கு நன்றி தெரிவித்து தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அவர்கள் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளார்.


அவ் அறிக்கையில், தமிழீழப் போராட்ட சூழ்நிலையில் யாழ். குடாநாட்டில் யுத்த மேகங்கள் சூழ்ந்திருக்கும் இவ் வேளையில், வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தனின் மகோற்சவ விழா சீரும் சிறப்புடன் இனிதே நடைபெற்று நிறைவேறியுள்ளது.

[4ஆம் பக்கம் பார்க்க]

தமிழனின் தேசிய ஆளுமையைக் கொன்றுவிட எமது பகைவர்கள் திடசங்கற்பம் பூண்டு நிற்கிறார்கள். எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசு ஒரு புறமும், இந்திய வல்லரசு மறு புறமுமாக எமக்கு பெரும் சவால்களாக எம்மை அச்சுறுத்தி நிற்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் ராஜன்



லெப். கேணல் ராஜன் மாதகல் பகுதியில் நேற்றுமுன் தினம் காலை எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்தார். இவருடன் மேலும் எட்டுப் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

யாழ். மாவட்டத் தளபதியாகவும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப் பிரிவின் சிறப்புத் தளபதியாகவும் முன்னர் பொறுப்புக்கள் வகித்த இவர் இறுதியாக அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பாளராகச் செயற்பட்டுவந்தார்.

## வரி விளம்பரம்

### 'நிழல்கள்' சிறுகதைத் தொகுப்பு

''அக்கினியில் கருகும் ஆத்மாக்கள்'' மூலம் முதற் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட செல்வி சந்திரா தியாகராசா (திருமதி சந்திரா இரவீந்திரன்) வின் பரிசுபெற்ற சிறுகதைகள், குறுநாவல் அடங்கிய ''நிழல்கள்'' பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், உதயன் புத்தக சாலை பருத்தித்துறை ஆகிய இடங்களில் விற்பனையாகின்றது. (3071)

### முக்கிய அறிவித்தல்

நீங்கள் பழுது பார்ப்பதற்காகக் கொடுத்த உங்கள் பொருள்களை செப்ரெம்பர் மாதம் 30-ம் திகதிக்குள் எடுக்காவிடின் அப்பொருள்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. பற்றுச் சீட்டு இல்லாமல் பொருள் பெற முடியாது. ஜீவிதா தொழில் நுட்பக்கூடம் ஒட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம். (சி/4955]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 29 — 05 — 1969

வீரச்சாவு 29 — 08 — 1989

### வீரவேங்கை லிங்கம்

**(பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கம்)**

பருத்தித்துறை

தாயக மீட்பில் உனையிழந்து
ஆயிரம் நாட்கள் அதற்குள் ஓடின
ஆனாலும் லிங்கமே உன்நினைவு
போகவில்லை உன் வழியில்
தொடர்கிறோம் நாமும்
இலட்சியம் ஈடேற பிரார்த்திக்கின்றோம்

மறவாமல் மனமுருகும்,
பெற்றோர், சகோதரிகள்
உறவினர்கள், நண்பர்கள்

லிங்கம் வீதி,
பருத்தித்துறை.
(3091)

## தொல்பொருள் கண்காட்சி 5ஆம் திகதி வரை நீடிப்பு

(கொழும்புத்துறை)

நல்லூர் அருள் மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் தற்போது நடைபெற்று வரும் ''கலைஞானி'' தொல் பொருள், கலைப்பொருள் கண்காட்சி அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்கவும், குறிப்பாக பாடசாலைகள் எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கும்போது மாணவ, மாணவிகள் கண்காட்சியைக் கண்டு பயனடையும் பொருட்டு அடுத்தமாதம் 5ஆம்திகதி சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு வே பொ. பாலசிங்கம், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் ஆகியோரின் ஆதரவில் நாவலர் வீதி-வைமன்வீதிச் சந்தியிலுள்ள கலாமண்டபத்தில் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை தினமும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

தினமும் பெரும்பாலானோர் இக் கண்காட்சியைப் பார்த்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

இடம் பெயர்ந்தோருக்கான

## உலர் உணவு அட்டைகள் வடமராட்சியில் விநியோகம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான புதிய ''இ'' உலர் உணவு அட்டைகள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு புதன், வெள்ளிக்கிழமைகளில் உலர் உணவு அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்து வடமராட்சி கிழச்கு பிரதேச செயலர் பிரிவுக்கு வெளியே தஞ்சமடைந்துள்ள மக்கள் புதன், வெள்ளிக்கிழமைகளில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில்உலர் உணவு அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திரு க. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (25)

### விளை. போட்டி

உரும்பராய் வடக்கில் அமைந்துள்ள அறவழி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியும், வளர்ந்தோர்க்கான விளையாட்டுப் போட்டியும் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து சரஸ்வதி சனசமூக நிலையத்தின் முன்றலில் பரிசளிப்பு விழாவும் சிறை, மெய்ப்பொருள் என்ற இரு நாடகங்களும் மேடையேற்றப்பட்டன.(3)

### நினைவுநாள்

இரும்பு மனிதன் நாகநாதன் நினைவு நாள் வரும் ஞாயிற்றுக்கிழமை அரியாலை ஆனந்தா வித்தியாலயத்தில் ப. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது

இந்நினைவு நாளையொட்டி பண்டிதர் நா. இராசையா, ந அருணாசலம், செ. துரைசிங்கம், ச. அ தர்மரத்தினம், வைத்திய கலாநிதி திருமதி தி. கோபாலரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்ற உள்ளனர்.

இதைத் தொடர்ந்து ஆசிரியர் ப கணபதிப்பிள்ளையின் ''புராதன இலங்கை'' நூல் அறிமுகஉரை இடம் பெறும். இவ் அறிமுக உரையை க. சொக்கலிங்கம் நிகழ்த்துவார். அதைத் தொடர்ந்து சங்கீத பூசணம் ச டாலசிங்கம் அவர்களின் பாடலும் இடம் பெறஉள்ளன.

## விற்பனை முகவர் தேவை

தைக்கப்பட்ட ஆடைகளை விற்பனை செய்யவும், ஆடைகள் தைத்துக் கொடுக்க ஓடர்கள் எடுக்கவும், அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் 45 வயதுக்குட்பட்டவராகவும், கணக்குகள் பேணுவதில் அனுபவமும், அறிவும் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும், விண்ணப்பங்கள் யாவும் கீழ் உள்ள முகவரிக்கு 15-9-92 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்**

யாழ். மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.

(சி-4957)

### ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலின் தெய்வீக இசையரங்குத் தொடரின் இன்றைய சிறப்பு நிகழ்ச்சி

வயலின் சோலோ

நேரம்: மாலை 7.00 மணிக்கு

R. ராதாகிருஷ்ணன் )
. கோபிதாஸ் ) — வயலின்
K. கண்ணதாஸன்—மிருதங்கம்
K. R. புண்ணியமூர்த்தி—தவில்
S. நாகராஜன்—கெஞ்சிரா
S. வேல்மாறன்—கடம்
S. ராஜா—முகர்சிங்

(3096)

# மாதகலில் வீரச்சாவடைந்த எட்டு வேங்கைகள்



கப்டன் கணேசன் கணேஸ்
(புண்ணியமூர்த்தி ரகு - 2ஆம் யூனிட், கந்தளாய் திருமலை)



கப்டன் வன்னியன்
(கணபதிப்பிள்ளை கணநாதன் கொக்காவில்வீதி, துணுக்காய்)



லெப். தயாபரன் பார்த்தீபன்
(சிவசுப்பிரமணியம் சிவசொரூபன்-யோகபுரம், மல்லாவி)

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

யாழ் கிளை, தலைமையகம்
பிரிவு

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

நடைபெறும் இடங்கள் :

## நினைவு கூருகின்றோம்... 1992 - 08 - 29

1986-ம் ஆண்டு இதே தினத்தில், மட்டக்களப்பில், சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**2 ம் லெப். சுந்தரம்** (தம்பிப்பிள்ளைஅருள்ராஜா- களுவாஞ்சிக்குடி, மட்டககளப்பு)

1989 - ம் ஆண்டு வல்வெட்டித்துறை /பொலிகண்டி, ஏழுபுளியடி வீதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லிங்கம்** (பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கம் - சந்திர லிங்கம் வீதி, பருத்தித்துறை)

நாவாந்துறையில் தேச விரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் கொட்டடி, கண்ணகிபுரத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1990-ம்ஆண்டு முல்லைத்தீவில், சிறிலங்காராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**லெப். பாரூக்** (வெள்ளையன் ஏகாம்பரம் - கோரக்கல்லிமடு, கிரான், மட்டக்களப்பு)

**கப்டன் - பாரூக்** (நாச்சிமுத்து நந்தகுமார் - 7-ம் கட்டை, அலம்பில், மணலாறு)

இதே பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**யசோ** (ஜோண் றொபின்சன் - பிரதான வீதி, இளவாலை.)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மாணவன் உட்பட மாவடிவேம்பு, குமாரவேலிப்பகுதிகளைச் சேர்ந்த 4- தமிழர்கள் வாழைச்சேனை இடம் பெயர்ந்தோர் முகாமில் வைத்து



/லெப்.
அருளையன்/பிரதீப்
(சாமித்தம்பி மகிந்தன் புதுக் குடியிருப்பு, வாழைச்சேனை)

மாதகல் பகுதியில் நேற்றுமுன்தினம் எதிர் பாராத விதமாக ஏற் பட்ட நேரடி மோத லில் ஒன்பது வேங்கை கள் வீரச்சாவை எய் தினர். இதில் வீரச் சாவடைந்த லெப். கேணல் ராஜன் தவிர் ந்த ஏனைய போராளி களின் படங்கள்.



2ஆம் லெப்.
இளங்கோ/யோகராஜா
(பாஸ்கரன் பிரபாகரன்-காங் கேசன்துறை, தையிட்டி)



வீரவேங்கை
கலைச்செல்வன் குகன்
(இருதயநாதன் புனிதராஜன் 2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை)



வீரவேங்கை
அறிவழகன்
(நாகலிங்கம் சிவகுமார் - குப் பிளான் தெற்கு, குப்பிளான்)



வீரவேங்கை.
மதியழகன்
(நடராஜா பூவலிங்கம் - மாங்குளம்)

# பொதுக் கூட்டம்

## நடைபெறும் இடங்கள் :

நாளை 30-08-1992 காலை 9-30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்ட இடங்களில் அந்தந்தப் பிரிவிற் குரிய தேர்தல்கள் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | கரவெட்டி | — | கரவெட்டிப் பிரிவுக் காரியாலயம் |
| 02. | பருத்தித்துறை | — | வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை |
| 03 | மருதங்கேணி | — | யா / செம்பியன்பற்று றோ க த. க பாடசாலை |
| 04. | ஊர்காவற்றுறை | — | ஊர்காவற்றுறைப் பிரிவுக் காரியாலயம், தற்காலிகம் |
| 05. | வேலணை | — | வேலணைப் பிரிவுக் காரியாலயம் (உயரப்பலம் வீதி ஆனைக்கோட்டை) |
| 06. | நெடுந்தீவு | — | சென்ஜோன்ஸ் அக்கடமி, தனியார் பாடசாலை |
| 07. | யாழ்ப்பாணம் | — | யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் |
| 08. | நல்லூர் | — | யாழ் செங்குந்த இந்துக்கல்லூரி, பாடசாலை |
| 09. | சாவகச்சேரி | — | சாவகச்சேரி. றிபேக் கல்லூரி |
| 10. | சண்டிலிப்பாய் | — | மானிப்பாய்.சோதி வேம்படி த க பாடசாலை |
| 11. | தெல்லிப்பளை | — | மல்லாகம் மகாவித்தியாலயம் |
| 12. | உடுவில் | — | சைவ மகாஜனக் கல்லூரி |
| 13. | கோப்பாய் | — | நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி |
| 14. | சங்கானை | | திருஞானசம்பந்தர் வித்தியாசாலை. |

மேற்படி கூட்ட அறிவித்தல் நிகழ்ச்சி நிரலுடன் அங்கத்தவர்களுக்கு தனித்தனியே அவ் அவ் செயலாளர் களால் அனுப்பப்பட்டுள்ளது ஆயினும் தற்போதைய சூழ்நிலையில் குறித்த அறிவித்தல் கிடைக்காவிடினும், இவ் அறிவித்தலை அங்கத்தவர்களும் ஏற்று, பிரிவு வருடாந்தக் கூட்டத்திற்குத் தவறாது சமுகம் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நன்றி
செஞ்சிலுவைச் சங்க சேவையில்

ச. த கணநாதன்
தலைவருக்காக
(இடைக்கால நிர்வாகம்)

(சி-4956)

படுகொலை செய்யப்பட்ட மாணவன் உட்பட மாவடி வேம்பு, குமாரவேலிப்பகுதிகளைச் சேர்ந்த 4- தமிழர்கள் வாழைச்சேனை இடம் பெயர்ந்தோர் முகாமில் வைத்து கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட புதுக் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - வந்தாறு மூலையில் கைது செய்யப்பட்டு சுட்டுச்கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மகன் - ஏறாவூர் ஐந்தாம் குறிச்சிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

ஆழியவளை - தரவைப்பகுதியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, மாவடி ஓடைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**ரஞ்சிதன்** (இளையதம்பி கந்தசாமி - விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை மட்டு)

மணலாற்றில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். விக்ரர்** (குமாரரட்ணம் சுபாஸ்கரன் - காவல் நிலைய வீதி, வெல்லாவெளி, மட்டக்களப்பு.)

**சிறிதரன்** (சூசைப்பிள்ளை நிக்கலஸ் - இருதயபுரம், மூதூர், திருக்கோணமலை.)

இதே பகுதியில், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எம்மைப் பிரிந்த -

**அஜந்தன் கோபு** (மதியாபரணம் தவகாந்தன் 32/ 3, பூமகள் வீதி, அரியாலை, யாழ்.)

முல்லைத்தீவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய -

**றோய்** (சொக்கலிங்கம் மதிவதனன் - முல்லைத்தீவு.)

வவுனியா, பாவற்குளம், ஆவரத்துலாப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மேஜர் - சுசிமாமா** (1 - ம் படிவம், பாவற்குளம், வவுனியா.)

**லெப். குமார்** (சிவசிதம்பரப்பிள்ளை ஜெயந்தன் - வைரவப்புளியங்குளம், வவுனியா.)

ஆனையிறவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**முகம்மது** (வினாயகம் ஜெயபரன் - அரசர்கேணி, பளை.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4954)

## சிந்தனைக்கு

அதே கல்லின் மீது இருமுறை இடறுவது அவமானம்.

— கிரேக்க பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## வரலாற்றுப் பாடம்

"யுத்தம் இப்படியே நீடித்தால் தமிழீழம் சரி என்ற முடிவிற்கே வர வேண்டும்- இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட தீர்வுக்குழு இந்த வருடத்தில் ஒரு முடிவை எடுக்கும் எனத் தெரியவில்லை." இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எப். குழுவைச் சேர்ந்த யாழ். மாவட்ட எம். பி. நவரத்தினம் பாராளுமன்றத்தில் அவசர கால நீடிப்புப் பிரேரணை தொடர்பான விவாதத்தில் பங்கு கொண்டு பேசும்போது தெரிவித்தார்.

"இதுவரை காலமும் அரசின் மீதுவைத்திருந்த நம்பிக்கை வீண்போனது போல் தெரிகின்றது. எம்மைக் கறிவேப்பிலை போல் பயன்படுத்தி விட்டு எறியும் நிலையை அரசாங்கம் கைவிடவேண்டும்" என கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் திவ்வியநாதனும் அதே விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

தமிழ் தரப்பு எம். பிக்கள் மட்டுமல்ல, முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. க்களும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டைக்கண்டனம் செய்துள்ளதோடு, இதுவரை அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வந்த தமிழ், முஸ்லிம் எம். பி.க்கள், இதேநிலை தொடர்ந்தால் தமது நிலைப்பாட்டை மாற்றப் போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் எம் பி. க்களும், முஸ்லிம் எம். பி. க்களும் விடுத்துள்ள எச்சரிக்கையும், இவ் எச்சரிக்கையை அவர்கள் எந்தளவிற்கு நடைமுறையில் பிரதிபலிப்பார்கள் என்பவையெல்லாம் ஒருபுறம் இருக்க, இதுவரை அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து அல்லது சந்தர்ப்பம் சூழ்நிலைக்கும் தமது நலனுக்கும் ஏற்ப நம்பிக்கை கொண்டுள்ளதுபோல் காட்டிக் கொண்ட தமிழ்க் குழுக்களுக்கு இன்று விரும்பியோ, விருப்பம் இன்றியோ அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினையைத தீர்க்கத் தவறிவிட்டது. தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளவில்லை எனக் குற்றம் சாட்ட வேண்டிய நிலை எழுந்துள்ளது,

இன்றுகொழும்பில்தங்கியுள்ள தமிழ்க்குழுக்களில் பெரும்பாலானவை ஆரம்பத்தில் ஆயுதப்போராட்டத்தைஏற்றுக்கொண்டகுழுக்களேஆகும். ஆனால் ஆயுதப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியாமல் தோல்வி கண்டநிலையில் தாம் ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டதாகவும், இனப் பிரச்சினைக்கு சிங்களப் பேரினவாத அரசாங்கம் சமாதான ரீதியில் அரசியல் தீர்வு காணும் எனக் கூறிக் கொண்டு சிங்கள அரசாங்

# இந்திய - பாகிஸ்தான் உறவில் முன்னேற்றம்?

# உள்நாட்டு நெருக்கடிகளின் நிர்ப்பந்தம்

நாடுகளுக்குஇடையிலான போர்கள் நடைமுறையில் இல்லாத இன்றைய உலகப்போக்கிற்கு இசைவாக பழைய எதிரிகளான இந்தியாவும் பாகிஸ்தானும் அவற்றுக்கிடையே நல்லுறவுகளை ஏற்படுத்தும் நோக்கில் நகர முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.

இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே என். டிக்ஷிற்றும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் சஹாரியார் கானுக்கும் இடையே மூன்று நாட்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பெருமளவிற்கு உறுதியான முன்னேற்றமெதையும் காணவில்லை. ஆனால், இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பொறுத்தவரை ஏற்பட்டுள்ள சொற்ப மேம்பாடு குறிப்பிடத் தக்கதொன்றாகவே இருக்கிறது என்று அவதானிகள் கூறுகிறார்கள்.

முன்னைய சுற்று பேச்சு வார்த்தைகளின் போது எந்த வகையான முன்னேற்றமுமே ஏற்பட்டிருக்கவில்லை. அந்த பின்னணியை அடிப்படையாக கொண்டு பார்க்கையில் தற்போதைய பேச்சு வார்த்தையில் ஏற்பட்டுள்ள மாற்றம் கவனிக்கத் தக்க ஒன்று என புதுடில்லியில் இருக்கும் கொள்கை ஆய்வுக்கான நிலையத்தின் அரசியல் ஆய்வாளரான பிரான்கோப்ரா கூறினார்.

நான்கு தசாப்தகாலத்தில் மூன்று போர்களைக் கண்ட இந்த இரு நாடுகளுக்கும் இடையே இது காலவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குள் கடந்த வாரத்தைய பேச்சுவார்த்தை மிகவும் ஆக்கபூர்வமானதாக இருந்தது என பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர் கூறினார்.

எமது நிலைப்பாடுகள்பாரிய இடைவெளியை கொண்டவையாகவே இன்னமும் இருக்கின்றன ஆனால் இந்த இடைவெளியைப்பற்றி எம்மால் பேசக்கூடியதாயிருப்பதே ஒரு முன்னோக்கிய நடவடிக்கைதான் என்றார் அவர்.

மூன்றில் இரண்டு பங்கு பிராந்தியத்தை, இந்தியாவின் ஆட்சியின் கீழும் எஞ்சியபகுதியை பாகிஸ்தானின் கட்டுப்பாட்டின் கீழும் கொண்டிருக்கும் காஷ்மீர்தான் இருநாடுகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளின்போது முன்னுரிமை கொடுத்து கவனிக்கப்பட்ட விவகாரமாகும். காஷ்மீருக்கு இரண்டு நாடுகளுமே உரிமை கோருவதன் காரணத்தால் இரண்டு போர்கள் முன்னர் மூண்டிருந்தன எனினும் அண்மைக்காலத்தில் இருநாடுகளுக்கும் இடையே பதற்றம் கடுமையாக அதிகரித்ததிற்கு பிரதானமான உடனடிக்காரணம் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் 1990 இலிருந்து முஸ்லிம் தீவிரவாதிகள் நடத்திவரும் கிளர்ச்சியேயாகும்

காஷ்மீரியர்களின் சுயநிர்ணயஉரிமையை ஆதரிப்பதாக கூறும் இஸ்லாமாபாத் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களையும் நிதியையும் வழங்குவதாக இந்தியா தெரிவிக்கும் குற்றச்சாட்டை நிராகரிக்கிறது. காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட வேண்டும் என முஸ்லிம் தீவிரவாதிகளில் ஒரு பிரிவினர் விரும்புகின்ற அதேவேளை இன்னொரு பிரிவு தீவிரவாதிகள் முற்று முழுதான சுதந்திரம் காஷ்மீருக்கு கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

"டிக்ஷிற்றுக்கும் சானுக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது காஷ்மீர் விவகாரம் ஆராயப்பட்டது அந்தவிவகாரம் ஆராயப்படமுடியாதது என அறவே நிராகரிக்கப்படவில்லை. அவ் விவகாரம் தொடர்பாக கணிசமான பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லை. ஆனால், அதை ஆராய தலைப்பட்டதே ஒரு முன்னேற்றம் தானே'' என்று பிரான்ஷோப்ரா தெரிவித்தார்.

'பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலில் காஷ்மீர் விவகாரம் சேர்க்கப்பட்டதே ஒரு முன்னேற்றமாகும். அதிலிருந்து இனிமேல் பின்வாங்குவதற்கு வழிகிடையாது. காஷ்மீர் விவகாரத்தில் தொடர்ந்து பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டிருக்கும்போது எதையாவது காத்திரமாக செய்தாக வேண்டுமென தீர்மானிக்கும் ஒரு கட்டம் நிச்சயம் வரும்' என சுயாதீனமான ஆய்வாளரான பிரேம் சங்கர் ஜா கூறினார்.

பேச்சுவார்த்தையில் காணப்பட்ட முன்னேற்றம் சிறியதாக இருக்கின்றதெனினும், அதையும் சற்று தாழ்ந்த தொனியில் கூறவே இந்தியா முயற்சிக்கிறது. பாகிஸ்தானுடனான எங்களது உறவுகளை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கான படிப்படியான அணுகுமுறையொன்று கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆனால், தேவையற்ற வகையில் அதீத நம்பிக்கை வைக்க காரணம் எதுவும் இல்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

வெளியுறவு செயலாளர்களுக்கிடையிலான பேச்சு வார்த்தைகள் கடந்த வாரம் முடிவடைந்த பின்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய இந்திய வெளியுறவு இணையமைச்சர் ஆர். எஸ் பாதியா 'காஷ்மீரிலும் பஞ்சாப்பிலும் பிரிவினை வாதிகளுக்கு வழங்கும் ஆதரவை நிறுத்துவதற்கான சான்று அறிகுறிகளை பாகிஸ்தான் காட்டினால் மாத்திரமே எந்தவொரு முன்னேற்றமும் இனிமேல் ஏற்பட முடியும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்திய பிரிவினை வாதிகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கப்பட்டு வந்த குற்றச் சாட்டு மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றமை இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றம் அண்மைக் காலத்தில் அகன்று விடும் அறிகுறியை காட்டுவதாக இல்லை.

ஆனால் இரு நாடுகளினதும் இராணுவங்களுக்கு இடையே அடிக்கடி துப்பாக்கிச் சண்டை மூளுகின்ற இமயமலை பிராந்தியமான சியாசென் தொடர்பாக இருதரப்பினரும் இணக்கப்பாடொன்றை கண்டிருப்பது போல் தோன்றுகிறது எனஜாவும் ஷோப்ராவும் தெரிவித்தனர்.

இது ஒரு முக்கியமான முன்னேற்றபடியாகும் ஆனால் இருதரப்பினருமே தங்களது இராணுவங்களுடன் கலந்தாலோசனை செய்யும் வரை இதை ஒத்துக் கொள்ளப் போவதில்லை என்று ஜா கூறினார்.

இராணுவ செலவினங்களை குறைக்க வேண்டிய தேவை இருநாடுகளுக்குமே ஏற்பட்டிருக்கிறது தற்போதைய காலகட்டம் பலவித நெருக்குதல்களை கொண்டதாகும். இதனால்பதற்றத்தை சற்று குறைக்க அவர்கள் விரும்புகின்றார்கள் என்பதே எனது எண்ணமாகும் என்று வளர்முக சமூகங்களின் ஆய்வுக்கான நிலையத்தின் ஓர் ஆய்வாளரான அஷிஷ்நந்தி கூறுகின்றார்,

இந்திய- பாகிஸ்தான்பேச்சு வார்த்தைகளின் பின்னர் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையிலே சியாசென்பகுதி தொடர்பாக கூட்டம் ஒன்று நடத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இரசாயனஆயுத பாவனையை தடை செய்வது மற்றும் இராஜதந்திரிகளை கண்ணியமாக நடத்துவது தொடர்பாக இருதரப்பினரும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இஸ்லாமாபாத்தில் இந்திய இராஜதந்திரியொருவர் பாகிஸ்தானிய புலனாய்வு ஏஜன்டுகளினால் கடத்தப்பட்டு துன்புறுத்தப் பட்டதையடுத்து வெளியுறவு செயலாளர்களுக் கிடையிலான முன்னைய சுற்றுப் பேச்சை புதுடில்லி ரத்து செய்திருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

பதிலுக்கு பாகிஸ்தானும் டில்லியில் உள்ள அதன் இராஜதந்திரிகள் இந்தியப் பொலிஸாரினால் துன்புறுத்தப் பட்டதாக குற்றஞ்சாட்டியது.

புதுடில்லிக்கு விஜயம் செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை பாகிஸ்தான் இராணுவ தளபதி ஜெனரல் அசீவ் நவாஸ் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் ஒரு பிரதான முன் முயற்சியாக இது அமையும் என்றும் இந்தியா அறிவித்திருக்கிறது.

நாவஸின்விஜயம் இராணுவ செலவினங்களை குறைப்பதற்கு வகை செய்யக்கூடிய உடன்படிக்கையொன்றுக்கு வழிவகுக்கலாம் என்று கூறிய ஷோப்ரா உறவுகளை மேம்படுத்துவதற்கான எத்தனங்கள் எப்போதுமே உள்நாட்டு நிர்ப்பந்தங்களின் தயவிலேயே இருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

நன்றி - ராய்ட்டர்

# ஈராக்கை பிளவு படுத்துவதற்கு அமெரிக்க நேசநாடுகள் முயற்சி

## - ஈரான் குற்றச்சாட்டு

(தெகிரான்)

ஈராக்கை பிளவு படுத்த அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் முயன்று வருகின்

கிய வான் படை நுழையக் கூடாது எனஅமெரிக்க ஜனாதிபதிஜோர்ஜ் புஷ் அறிவித்தஏற்பாட்டைத்தொடர்ந்தேஈரான்

குள்ளேயே உலவுவதற்கு அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தடைவிதித்திருப்பது ஈராக்கின் இறைமையை

## சமய அறிவுப் போட்டி பரிசு பெற்றோர் விபரம்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகரசபையினால் 23- 08- 1992 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9. 00 மணிக்கு நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியின் முடிவுகளும், 26- 08- 1992

பெற்றோரின் விபரங்கள் வருமாறு:-

**கீழ்ப்பிரிவு:-**

1 ஆம் இடம் - கணேஷன் சுஜீவன் [யாழ். இந்துக் கல்லூரி]

2 ஆம் இடம் - மாதுமையாள் சண்முகரத்தினராசா [யாழ்.

வும், இனப் பிரச்சினைக்கு சிங்களப் பேரினவாத அரசாங்கம் சமாதான ரீதியில் அரசியல் தீர்வு காணும் எனக் கூறிக் கொண்டு சிங்கள அரசாங்கத்துடன் ஒத்துப்போக முடிவுகளை மேற்கொண்டவர்கள்

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஆயுதப் போராட்டமே வழி என்ற முடிவு திடீரென எடுக்கப்பட்ட ஓர் முடிவல்ல. தமிழ் மக்களும், தலைவர்களும் நீண்டகாலமாக சாத்வீக ரீதியில் போராடி தோல்வி கண்ட நிலையிலும், சாத்வீகமான போராட்டங்களைச் சிங்களப் பேரினவாதம் இராணுவத்தைக் கொண்டு அடக்க முற்பட்டதன் விளைவாகவும் உருவானதாகும். அதாவது படிப்படியாக வளர்ச்சி அடைந்து வேறுவழி இல்லை என்ற நிலையில் ஓர் வரலாற்றின் நியதியாகத் தவிர்க்க முடியாமல் உருவானதே தமிழரின் ஆயுதப் போராட்டமாகும்.

இது தமிழர் தரப்பில் சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இருந்தது. இந்நிலையில் தான் அன்று ஆயுதப் போராட்டம் எனக் கூறிக் கொண்டு பல குழுக்களும் தோன்றின. மக்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள் அதாவது ஆயுதப் போராட்டம் ஒன்றே தமிழரின் விடுதலைக்கு ஒரே வழி என்பது சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் தமிழ்மககளின் உரிமைகளைக் குறிக்கோளாகக் கொள்ளாமல் அந்நியர்களின் கைப்பாவைகளாகவும் தமது நலனை குறிக்கோளாகவும் கொண்ட குழுக்கள் ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து நடத்த முடியாத நிலையில்— அதாவது மக்களால் தோற்கடிக்கப்பட்ட நிலையில் தாம் ஜனநாயக வழியில் திரும்பியதாகக் கூறிக் கொண்டு சிங்கள பேரினவாத அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தொடங்கின. இதன்மூலம் தமிழர் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் சக்திகளாகவும் மாறின.

ஆனால் விடுதலைப் புலிகள் வரலாற்றைத் தெளிவாகப் புரிந்துகொண்டனர். சிங்களப் பேரினவாதம் தமிழர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளும்வரை ஆயுதப்போராட்டத்தை விட்டுக்கொடுப்பதில் அர்த்தமில்லை என்பதை தெளிவாகஉணர்ந்திருந்தனர். அவர்களின் நிலைப்பாடு வரலாறுவழங்கியபடிப்பினையாக இருந்தது. ஆனால்இவ்வரலாற்றுப்படிப்பினையை ஏனைய தமிழ்க்குழுக்கள்புரிந்து கொள்ளவில்லை, வரலாற்றின் வளர்ச்சியை ஏற்க மறுத்தனர். வரலாற்றுச் சக்கரத்தை திருப்பமுயன்றனர்ஆனால்தோல்விகண்டனர். ஆனால்வரலாறும் இவர்களுக்காக காத்து நிற்காது, நிற்கவில்லை.

(தெகிரான்)

ஈராக்கை பிளவு படுத்த அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் முயன்று வருகின்றன என்று ஈரான் குற்றஞ் சாட்டியுள்ளது

தெற்கு ஈராக்கின்மீது ஈராக்கிய வான் படை நுழையக்கூடாது எனஅமெரிக்க ஜனாதிபதிஜோர்ஜ் புஷ் அறிவித்தஏற்பாட்டைத்தொடர்ந்தேஈரான் இக்குற்றச்சாட்டை விடுத்துள்ளது.

ஈராக் தனது பிரதேசத்திற்குள்ளேயே உலவுவதற்கு அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தடைவிதித்திருப்பது ஈராக்கின் இறைமையை மீறும் செயலாகும் எனவும் தெரிவித்துள்ளது.

பாரசீக வளைகுடாவில் உள்ள ஆறு நாடுகளில் குவைத் மட்டுமே அமெரிக்காவின் தடைக்கு பகிரங்க ஆதரவு தெரிவித்திருக்கிறது.

அமெரிக்காவின் ஏற்பாட்டின் படி குறித்த வான்பரப்புப் பகுதிக்குள் பறக்கும் ஈராக்கிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படலாம். இதற்கென அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் போர் விமானங்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய தேயிலை விற்பனை; ரஷ்யா வெளியேறியது

(டில்லி)

ரஷ்யா இந்திய தேயிலை ஏலவிற்பனையிலிருந்து தன்னிச்சையாக வெளியேறி விட்டது. ரஷ்யா இவ்வளவு காலமும் கடனுக்குத்தான் தேயிலையை வாங்கி வந்தது.

கடன் இனிமேல் இல்லை என்று இந்தியா தெரிவித்ததன் பேரிலேயே ரஷ்யா வெளியேறிவிட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது

இந்த ஆண்டு 60 மில்லியன் கிலோ கிராம் தேயிலையை ரஷ்யா இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்திருக்க வேண்டும். ஆனால் வாங்கியது 15 மில்லியன் கிலோ கிராம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

# இரு விமான விபத்து; 91 பேர் உயிரிழப்பு

மொஸ்கோவின்வடகிழக்கே இகார்னோ எனும் இடத்தில் ரஷ்யாவின் 'ஏறோ புளட்' விமானமொன்று விபத்துக்குள்ளானதில் ஐந்து சிப்பந்திகள் உட்பட 77 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு ரஷ்யாவிலுள்ள ஒரு இடத்திலிருந்து இந்த விமானம் புறப்பட்ட போது இந்த விபத்து நிகழ்ந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் எல்சல்வடோரில் இடம்பெற்ற மற்றுமோர் விமான விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். மலைப்பகுதியுடன் முட்டியதால் இந்த விபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மண்டல சார்பற்ற நாடுகள் எண்ணிக்கை அதிகரிப்பு

பிலிப்பைன்ஸ், புருண்ண மற்றும் உஸ்பெக்கிஸ்தான் மண்டல சார்பற்ற இயக்கத்தின் புதிய உறுப்புநாடுகளாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து இந்த இயக்கத்தின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 109 ஆக உயர்ந்து விடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து, குறொஸ்ஸியா மற்றும் ஆர்மேனிய நாடுகளுக்கு பார்வையாளர் அந்தஸ்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொஸ்னியா மற்றும் ஸ்லவேனியாவிற்கு விருந்தினர் அந்தஸ்து வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# பதில் அளிக்க ரமோசுக்கு உத்தரவு

பிலிப்பைன்சில் ஜனாதிபதி பிடஸ் ரமோஸ் முறைகேடான விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டதான குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்குமாறு பிலிப்பைன்ஸ் சுப்ரீம் கோர்ட் பிடஸ்ரமோசுக்கு உத்தரவிட்டுள்ளது.

# அணிசேரா நாடுகள்

## உச்சிமாநாடு

(ஜகார்த்தா)

ஜகார்த்தாவில் அணிசேர நாடுகளின் உச்சிமாநாடு அடுத்த மாதம் முதலாம்திகதி தொடக்கம் ஆறாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

100க்கும் அதிகமான நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் இம்மாநாட்டில் சிறிலங்காவின் சார்பில் பிரதம மந்திரி டி.பி விஜயதுங்கா கலந்து கொள்வார் என தெரிவிக்கப்படுகிறது.

## இராஜதந்திரிகள் வெளியேற்றம்

காபூல் மீது ரொக் கட் தாக்குதல் மோசமாக நடைபெறுவதால் பிரான்ஸ் இத்தாலிய ராஜதந்திரிகள் வெளியேறியுள்ளனர்.

காபூலிலிருக்கும் முன்னாள் கம்யூனிஸ்ட் ஆட்சியின் பட்டாளத்தை துரத்தி வெளியேற்றுவதற்கு புனித யுத்தம் புரிய முஸ்லிம்கள் முன்வர வேண்டுமென ஆப்கான் புரட்சித் தலைவர் குள்புதீன் ஹேக்மத்தியார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மணிக்கு நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியின் முடிவுகளும், 26-08-1992 புதன்கிழமை முற்பகல் நடாத்தப்பட்ட சமய அறிவுப் பேச்சுப் போட்டியின் முடிவுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

சமய அறிவுப் போட்டியின் விபரங்கள் வருமாறு:-

**அதிமேற்பிரிவு:-**

1ஆம் இடம்- கந்தசாமி முகுந்தன், (யா/ மகாஜனக் கல்லூரி)
2 ஆம் இடம் - சிவசுகி குமாரசாமி. (யா/ மகாஜனக் கல்லூரி)
3 ஆம் இடம் - நடேசபிள்ளை ஞானவேல். (யா/ இந்துக் கல்லூரி)
தகைமை பெற்றோர்- 9 பேர்

**மேற்பிரிவு:-**

1 ஆம் இடம் - பகீரதி தங்கராஜா, (யா/ இந்து மகளிர் கல்லூரி)
2 ஆம் இடம் - பரமநாதன் சேயோன், (யா/ யூனியன் கல்லூரி)
3 ஆம் இடம் - ஜெயராசா ஜெயகாந்தன், (யா/ இந்துக் கல்லூரி)
தகைமை பெற்றோர் 32 பேர்

**மத்தியபிரிவு:-**

1 ஆம் இடம் - சாம்பசிவம் சுதர்சன், (யா/ இந்துக் கல்லூரி)
2 ஆம் இடம் -சஜீதா சண்முகராஜா, (யா/ மகாஜனக் கல்லூரி)
3 ஆம் இடம் - பற்குணராஜா சிவதீபன், (யா/ இந்துக் கல்லூரி)
தகைமை பெற்றோர் 22 பேர்

**கீழ்ப்பிரிவு:-**

1 ஆம் இடம் - சுவர்ணா நாகேந்திரன், (யா / மகாஜனக் கல்லூரி)
2 ஆம் இடம் - கணேசன் சேந்தன், (யா/ பரியோவான் கல்லூரி)
3 ஆம் இடம் - அருளானந்தம் அன்புருவேல், (யா/ பரியோவான் கல்லூரி)
தகைமை பெற்றோர் 35 பேர்

பேச்சுப்போட்டியில் வெற்றி

கல்லூரி]
2 ஆம் இடம் - மாதுமையாள் சண்முகரத்தினராசா [யாழ். மகாஜனக் கல்லூரி]
3 ஆம் இடம் - சிவரத்தினம் செல்வநாயகம் [வைத்தீஸ்வராக் கல்லூரி]
தகைமை பெற்றோர் 7 பேர்

**மேற்பிரிவு:-**

1 ஆம் இடம் - விநோதினி விஜயரத்தினம் [யாழ். மகாஜனக் கல்லூரி]
2 ஆம் இடம் - கருணாநிதி ஜெயநிதி [யாழ். இந்துக் கல்லூரி]
3 ஆம் இடம் - சற்குணராசா ராஜ்குமார் [யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி]
தகைமை பெற்றோர் 10 பேர்

பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பு விழா இன்று 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். பேச்சுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்டோர் அவையினர் முன்னிலையில் உரையாற்றுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு வழங்கப்படும்

வெகுஜனதொடர்புத்துறையினரின் பாதுகாப்பை நிச்சயப்படுத்த பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சிறிலங்கா ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைச் சேகரிக்கும் வெகுஜனத் தொடர்புத்துறையினருக்கு பாதுகாப்பு வழங்கப்படும் எனவும், கோட்டை ரயில் நிலையத்தில் கடந்த மாதம் ஏழாம் திகதி கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்கள் எனவும், மேலும் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

ஈழநாதம்

# அகதிகள் அனுப்புவதற்கான நீதிமன்றத்தடை ரத்து

(சென்னை)

தமிழ்நாடு அரசு இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதை ஒருவார காலத்திற்கு தடுத்துவைத்த உயர் நீதிமன்றத்தின் தடை உத்தரவு நேற்று ரத்துச்செய்யப்பட்டது.

அகதிகளின் விருப்பத்திற்கு இணங்கவே தாயகம் திருப்பி அனுப்பிவைக்கப்படுவதாகவும் எந்தவிதமான பலவந்தப்படுத்தல் அல்லது கட்டாயப்படுத்தல் பிரயோகிக்கப்படவில்லை எனவும் மாநில அரசு அப்பீல் மனுவில் தெரிவித்திருப்பதை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தற்காலிகத் தடை உத்தரவுகளை ரத்துச் செய்து தீர்ப்பளித்தது.

அத்துடன், அகதிகளுக்கான ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள் முன்னிலையிலேயே அகதிகள் தாயகத்திற்கு திரும்ப தாங்களாகவே முன்வந்ததாக மாநில அரசு கொடுத்த பிரமாணப் பத்திரத்தை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

தாயகத்திற்கு திரும்ப விருப்பம் தெரிவிக்கும் அகதிகளுக்கு தேவையான ஆவணங்களை தமிழிலேயே கொடுக்கும்படியும் உயர்நீதிமன்றம் கேட்டுக் கொண்டது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1992-09-25 ஆம் திகதிவரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

தற்காலிக போதனாசிரியர் (கணனிப்பகுதி) - ரூபா 3,250/- (நிலையானது) மாதமொன்றிற்கு

(பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை 3,000/- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.)

தகைமைகள்:-

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்விற்குத் தோற்றி பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்.

இப்பல்கலைக் கழகத்தின் தாபனக்கிளையின்சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச. மீ அளவுடையகடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்


# முன்னணி பாடசாலைகளின் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர விசேட பரீட்சை (1991) இன் பெறுபேறுகள் நேற்று யாழ் மாவட்டத்தில் வெளியாகின இப்பரீட்சையில் பாடசாலைகள் மட்டத்தில் கிடைத்த முன்னணி பெறுபேறுகளில் சில வருமாறு;

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

4A — 1
3A,B — 1
2A, 2B — 1

வேம்படி மகளிர் கல்லூரி

4A — 1
2A, 2B — 3
2A, B, S — 1

யாகனகரட்ணம் மகா. வித்தியாலயம்

4A, — 1
2A, B, C — 3
A, 2B, C — 3

சென் ஜோன்ஸ் கல்லூரி

A, 2B, C — 1
A, B, 2C — 2
A, B, C, S — 1

A, 3B — 2
A, 2B, C — 5

இந்து மகளிர் கல்லூரி

2A, 2B — 1
2A, B, S — 2
A, 2B, C — 1

கொக்குவில் இந்துக் கல்லூரி

3A, C — 2
2A, 2B — 2
2A, B, C — 4

யாழ். மத்திய கல்லூரி

A, 2B, C — 1
A, B, 2C — 1
3B, C — 1

ஆங்கிலத் திருக்குடும்பக் கன்னியர் மடம்

A, 3B — 2
2A, 2C — 1
A, B, 2C — 2
3B, C — 1

(பா)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

(கொடிகாமம்)

மிருசுவில் வீட்டில் நிறுத்தப்படடிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, சென்ற திங்கட்கிழமை அன்று நள்ளிரவுவேளை மிசுருவிலைச் சேர்ந்த ஜெ. ஆனந்தராசா என்பவரது வீட்டிலேயே நடைபெற்றது. இவர் தனது சொந்தமான (CD - 50) கொண்டா மோட்டார் சைக்கிளை தனது இல்லத்தில் முன் வாசலில் விட்டுவிட்டு வீட்டுக்குள் நித்திரை செய்யும்போதே களவாடப்பட்டுள்ளது. (86)

## பரீட்சைப்

விய போர் சூழலே மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளில் வீழ்ச்சி ஏற்பட்டதற்கு காரணம் என கல்விமான்கள் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (பா)

# பிரேமாவின் தனிமனித ஆட்சி; எதிர்க்கட்சிகள் கண்டனம்

சிறிலங்காவின் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து சிறிலங்கா ஜனாதிபதி மீதான குற்றவியல் நீதி விசாரணை மனு கொண்டு வந்து ஒருவருட பூர்த்தியை நேற்று அனுஷ்டித்தன.

இதனை முன்னிட்டு கொழும்பில் ஒழுங்கு செய்திருந்த அரச எதிர்ப்பு ஊர்வலத்தில் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டதாக பி. பி. சி செய்தியாளர் தெரிவித்தார்.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சிப்பேச்சாளர்கள் பிரேமதாசா அரசு ஒரு தனிமனித ஆட்சி என வர்ணித்தனர்.

இதேவேளை ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி இரண்டரை இலட்சம் கையொப்பங்களைப் பெற்று பிரேமதாசாவிற்கு எதிர்க்கும் மக்கள் எதிர்ப்பை காட்ட முயற்சி செய்து வருகிறது.

எதிர்க்கட்சிகள் இன்றைய ஊர்வலம் குறித்து மகிழ்ச்சியாக உள்ளதாக ஏ. எவ். பி செய்தியாளர் தெரிவித்தார்.

## எதிரியின் சவாலை

அனைத்துலக தமிழ்ப் பண்பாட்டின் மையமாக தன்னாட்சி உரிமைக்கு தகுதிபெற்றதாக, அரசியல் ஆளுமை பெற்று வளர்ந்துள்ள தமிழீழத்தேசியம் இந்திய உபகண்ட தேசிய எழுச்சிப் போராட்டங்களுக்கு உந்துசக்தியாக அமைந்துவிடுமென இந்தியா அஞ்சுகிறது குறிப்பாக தமிழ் நாட்டில் செத்துக்கொண்டிருக்கும் திராவிடப் பண்பாட்டு இயக்கத்திற்கு புத்துயிரளித்து தூங்கிக்கிடக்கும் தமிழகத் தமிழனை தட்டி எழுப்பிவிடலாமென பாரதம் பயப்படுகிறது. இந்தியாவிலும் உலகளாவிய ரீதியிலும் தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும் தமிழ்த் தேசிய எழுச்சிக்கும் ஊக்க சக்தியாக உருவாக்கம் பெற்றுவரும் தமிழீழ தேசியத்தை ஆரம்பத்திலேயே சிதைத்துவிட வேண்டுமென டில்லி ஆட்சிபீடம திட்டம் தீட்டியது. இந்த நோக்கிலதான் இந்திய ஆளும் வர்க்கமானது சிங்களப் பேரினவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஒப்பந்தம் செய்து எமது மண்ணில் தனது ஆக்கிரமிப்புப் பாதங்களைப் பதித்தது தமிழீழ தேசியத்தின் புரட்சி வடிவமான புலிகள் இயக்கத்தை அழித்துவிட முனைந்தது இந்திய தலையீடு. அதனால் எமது தாயகததில் நிகழ்ந்த மனிதக் கொலைகளும், அழிப்புகளும் தமிழ்த் தேசியத்தை நசுக்கிவிட முடியவில்லை. பதிலாக எமது போராளிகளதும் பொதுமக்களதும் உறுதிமிக்க எதிர்ப்பியக்கம் தேசியப் பறறுணர்வை மேலும் வலுப்படுத்தியது என்றுதான் சொல்லவேண்டும்.

இந்திய ஆட்சியாளரதும் சிங்களப் பேரினவாதிகளதும் நெருககுதல்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து தமிழீழ தேசிய எழுச்சியை 'பிரிவினைவாதம்' என்றும் 'பயங்கரவாதம்' என்றும் உலகிற்கு திரித்துக் காட்டுவதில் இந்தியா முனைப்பாக நிற்கிறது. தமிழரின் தேசிய கட்டமைப்பிற்கு ஆதாரமாக விளங்கும் தமிழரின் வரலாற்றுப் பூமியை ஆக்கிரமிப்பால் அபகரித்துக் கொள்ள சிங்களப் பேரினவாதம் பகீரத முயற்சிகளைச் செய்கிறது. இதனால் எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லாத ஒரு பெரிய சவாலை சந்தித்து நிற்கிறது.

இந்தச் சவாலை நாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு முறியடிப்பதாயின் ஒரு திடமான, வலுவான தேசிய எதிர்ப்பியக்கத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்கம் செய்யவேண்டும்.

ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. ஒரு விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் சக்தி அணி திரண்டு எழுச்சி கொள்ளும்பொழுதுதான் அது மக்கள் போராட்டமாக தேசிய போராட்டமாக முழுமையும், முதிர்ச்சியும் பெறுகிறது. அப்பொழுதுதான் விடுதலையும் சாத்தியமாகிறது

எமது விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயமாக்கி மக்கள் போராட்டமாக முழுமைப்படுத்தி, மக்கள் அரங்கிலிருந்து

# தனிப்பட்டபரீட்சார்த்திகளின் முடிவுகள் அனுப்பப்பட்டன

யாழ். மாவட்டத்தில்வெளியிடப்பட்ட க. பொ. த உயர்தரப்பரீட்சையின் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என கல்வித்திணைக்களம்அறிவித்துள்ளது

மேலும் தீவுப்பகுதித்தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை வேலணைக் கோட்டத்திலும் வலிமேற்குப் பகுதிப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இயங்கும் பண்டத்தரிப்புக் கோட்டத்திலும் வைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தமது ஆளடையாளங்களை நிரூபித்து நேரில் பெற்றுக்கொள்ளுமாறு பிராந்திய கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார் [பா]

## காவல்துறை

நல்லூர் கந்தன் ஆலயமகோற்சவ காலத்தில் முதன்முதலாக தமிழீழக் காவல் துறையின் உற்சவகாலப் பணிமனை ஒன்றை அமைத்து லட்சோப லட்சம் அடியார்கள், பக்தர்கள் அனைவருக்கும் பணி செய்யும் அரிய வாய்ப்பை இம்முறை பெற்றுள்ளோம்

கடந்த இருபத்தி ஐந்து தினங்களாக நடைபெற்ற உற்சவ தினங்களின்போது தமிழீழ காவல்துறையுடன இணைந்து, அடியார்கள், அன்பர்கள் அனைவரின் நலங்கள் பாதுகாப்பு வீதி ஒழுங்குகள் என்பனவற்றின் இரவு பகலாக பணிபுரிந்த சென்ஜோன் அம்புலன்ஸ் [illegible] யினர்; சாரணர்கள் யாழ். மாநகரசபை ஊழியர்கள் மற்றும் ஏனைய தொண்டர் ஸ்தாபனங்கள் அனைவருக்கும் தமிழீழ [illegible] துறையின் [illegible] நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது

## எவரும் அனுப்பப்படவில்லை

சுவிஸ் [illegible] அனுப்புவதாகக் கூறிய [illegible] தமிழ் அகதிகளில் ஒருவரையாவது இதுவரை அவர்கள் திருப்பி அனுப்பவில்லை என்று [illegible] ஜனநாயக [illegible] தேசிய [illegible] ஆர்வலர்கள் [illegible] தெரிவித்தார்.

அலங்காரம்...

## வலிகாமம்

வலிகாமம் பகுதியில் பிற்பகல் 3 மணிக்கு இவ்வூர்தியும் நேற்றையதினம் வெற்றிலைக்கேணி சின்னமண்டலாய் சிறிலங்கா இராணுவ காவலரண் மீதான தாககுதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். தொல்காப்பியன் [நீர்வேலி] புகழுடல் கோப்பாய் கந்தசுவாமி கோயிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அங்குஅஞ்சலிக்கூட்டம் இடம்பெறும் அஞ்சலிக் கூட்டம் நிறைவடைந்ததும் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தியும், புகழுடம்பும் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, மாவீரனின் புகழுடம்பு புதைகுழியில் விதைக்கப்பட்டும், உருவப்படங்களுக்குரியமாவீரர்களின் நினைவுக்கற்கள் நாட்டப்படவும் உள்ளன.

நேற்றைய தினம் சின்னமண்டலாயிலுள்ள சிறிலங்கா இராணுவ காவலரண மீதான தாககுதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். மன்றவாணன் [மீசாலை வடக்கு, கொடிகாமம்], வீரவேங்கை கோமகன் [மறவன் புலோ, சாவகச்சேரி] ஆகியோரது புகழுடம்பும், உருவப்படங்களைத் தாங்கிய அஞ்சலி ஊர்தியும் மக்களின் அஞ்சலிக்காக பிற்பகல் 4. 00 மணிக்கு மீசாலைதெற்கு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் இடம் பெறும. பின்னர் மாவீரர்களின் புகழுடம்புகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கபபடும்.

## வடமராட்சி

வடமராட்சியில் ஒன்பது மாவீரர்களின் உருவப் படங்கள் தாங்கிய அஞ்சலி ஊர்தி, வீதிகளவழியாகஅஞ்சலிக்காக பவனிவந்துபருத்தித்துறையை

ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின்மூலம் விண்ணப்பித்தல்வேண்டும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-08-27
(சி/4959)

கல்லூரி
A, 2B, C — 1
A, B, 2C — 2
A, B, C, S — 1

சென் பற்றிக்ஸ்
கல்லூரி
2A, B, C — 1
A, 2B, C — 1
2B, 2C — 1

யாழ் இந்துக்
கல்லூரி
2A, 2B — 3
2A, B, C — 3

3B, C— 1

(பா)

பலோமி

கின்றனர். அன்றையதினமே அனுமதி அட்டைகளை பரீட்சைமுடிந்த உடனேயே தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களைக் கொண்டு தங்கள் ஒப்பங்களை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். (பா)

போராட்டமாக முழுமையும், முதிர்ச்சியும் பெறுகிறது. அப்பொழுதுதான் விடுதலையும் சாத்தியமாகிறது

எமது விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயமாக்கி மக்கள் போராட்டமாக முழுமைப்படுத்தி, மக்கள் அரங்கிலிருந்து ஒரு பலமான, உறுதிமிக்க தேசிய எதிர்ப்பியக்கத்தைக் கட்டி எழுப்பும் பணி இன்றைய வரலாற்றுத் தேவையாக எழுந்திருக்கிறது. இந்தத் தேவையைப் பூர்த்திசெய்வதில் எமது கலை, இலக்கிய படைப்பாளிகளின் பங்கு முக்கியமானது.

எமது போராட்ட வாழ்வின் மெய்யுண்மைகளை கலை, இலக்கியப் படைப்புக்கள் தரிசித்து நிற்கவேண்டும். எமது சமூக வாழ்வியக்கத்தின் சகல பரிமாணங்களிலும் ஆழமாக ஊடுருவி நிற்கும் இன ஒடுக்குமுறையின் கொடூரத்தினைச் சிருஷ்டிகர்த்தாக்கள் சித்தரித்துக் காட்டவேண்டும். மக்கள் இடையே விழிப்புணர்வையும், எதிர்ப்புணர்வையும், விடுதலை உணர்வையும் தூண்டி விடும் கலை, இலக்கிய ஆக்கங்களே எமது இலட்சியப்போருக்கு உரமேற்றுவதாக அமையும். இத்தகைய கலை, இலக்கியப் படைப்புக்களே தேசிய எதிர்ப்பியக்கத்திற்கு உயிரூட்டுவதாகவும் அமையும்.

விதைக்கப்பட்டும், உருவப் படங்களுக்குரியமாவீரர்களின் நினைவுக் கற்கள் நாட்டப்படவும் உள்ளன.

தென்மராட்சி

தென்மராட்சியில் நேற்

வடமராட்சியில் ஒன்பது மாவீரர்களின் உருவப் படங்கள் தாங்கிய அஞ்சலி ஊர்தி, வீதிகளவழியாகஅஞ்சலிக்காக பவனிவந்துபருத்தித்துறையை வந்தடைந்ததும் அஞ்சலிக் கூட்டம் இடம் பெறும்.

# சின்ன மண்டலாயில் 04 புலிகள் வீரச்சாவு


வெற்றிலைக்கேணிப் பகுதியில் சின்னமண்டலாயில் நேற்றையதினம் இடம்பெற்ற காவலரண் மீதான தாக்குதலில் நான்கு வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இந்த நான்கு வீரவேங்கைகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



கப்டன் இதயன்
(பிரான்சிஸ் ஜேசுநேசன்
அரிப்பு முருங்கன், மன்னார்)



லெப். மன்றவாணன்
(கதிர்காமவேலன் சிறிகாந்தன் -மீசாலை வடக்கு,வேம்பராய், கொடிகாமம்)



லெப்.
தொல்காப்பியன்
(சுப்பிரமணியம் வசந்தரூபன்
நீர்வேலி தெற்கு, நீர்வேலி)



வீரவேங்கை
கோமகன்
(மாணிக்கம் ஞானசேகரம்
மறவன் புலோ, சாவகச்சேரி)

## வீரச்சாவு

## லெப். கேணல் இராஜன்

மாதகலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் லெப்டினன்ட் கேணல் இராஜன் (சோமசுந்தரம் சற்குணம், மாதகல் மேற்கு மாதகல்) வீரச்சாவு அடைந்தார் என்பதை அறியத்தருகிறோம்

இவருடன் வீரச்சாவு அடைந்த ஏனைய எட்டுப் போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:
விளையாட்டு அரங்கு வீதி,
(சரா வீதி)
(3100) கல்வியங்காடு

## உள்வந்த வெளிச்சென்ற வாசன இலக்கங்கள்

## 28-08-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5398

வடபகுதிக்கு வெளியே அனுமதிந்த வாகன இலக்கம்

41-5015, 41-9038, 27-5099, 26-1724, 26-3146, 26-9158, 41-4194, 28-1928, 24-6555, 26-763, 24-0521, 40-4429, 26-5962, 41-1665, 24-1983, 26-0767, 28-2511, 40-2677, 41-9992, 26-4057, 26-6026.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

26-1785, 42-3495, 26-8936, 24-9390, 26-673, 26-6743, 28-5294, 28-4367, 26-2277, 24-1259, 24-6699, 26-7393, 28-882, 36-4230.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி,31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 - ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.